# "தர்மம் சர,,

धर्मं चर

மே (15.05.2025) , பிரதி-9 -கும்பகோணம்


## ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்

### *பலவானின் அராஜகம்



அடுத்தவனை வருத்தி, அதை ரசிக்கும் உன் குணத்தை இந்த உலகம் வேண்டுமானால் மறந்து போகலாம். ஆனால், நீ கீழே விழும்போது காலம் அதை உன் நினைவில் கொண்டு வரும். அப்போது அதை தாங்கும் சக்தி உனக்கோ, உன் சந்ததிகளுக்கோ இருக்காது. பலம் பொருந்திய ஒருவனின் அராஜகம், அகந்தை, கோபம் ஆகியவற்றை காலம் ஒருநாள் எடுத்துச் சென்றுவிடும். அப்போது உணர்ந்து பார்க்கலாம் என்றால் காலம் அதற்கு இடம் தராது.

ஒரு காட்டில் கரையான்கள் ஒன்று கூடி ஒரு புற்றை கட்டுவது என்று தீர்மானித்தன. அதற்கான இடத்தை தேர்வு செய்து, புற்றுக்கு உகந்த மண்ணை தேர்ந்தெடுத்து புற்றை கட்டத்தொடங்கின. அந்த இடத்திற்கு ஒரு பாம்பு வந்தது. கரையான்கள் கடுமையாக வேலை செய்வதைப் பார்த்தது. அன்றிலிருந்து கரையான்கள் வேலை செய்யும் இடத்திற்கு வருவதும், வேடிக்கை பார்ப்பதும் வழக்கமாக கொண்டிருந்தது பாம்பு. இப்படியே ஒரு வருடகாலம் சென்றது.கரையான்கள் புற்றை கட்டி முடித்தன. பாம்பு பேசியது. "கரையான்களே! நீங்கள் கட்டிய புற்று அருமையாக இருக்கிறது. நான் ஒருமுறை உள்ளே சென்று பார்க்கட்டுமா?" என்று கேட்டது. கரையான்கள் சம்மதித்தன. பாம்பு புற்றுக்குள்ளே சென்று பார்த்தது. பாம்பு வெளியேவரும் என்று கரையான்கள் காத்திருந்தன. அது வெளியே வரவில்லை. கரையான்கள் வெளியிலிருந்து பாம்பை கூப்பிட்டன. புற்று வசதியாக இருக்கிறது. இனி இது என்னுடையது. வேண்டுமென்றால், நீங்கள் இன்னொரு புற்றை கட்டிக்கொள்ளுங்கள். இங்கிருந்து கிளம்புங்கள், இல்லையென்றால் என் விஷத்துக்கு இரையாவீர்கள் என்று மிரட்டியது பாம்பு. சோகத்தோடு கிளம்பின கரையான்கள். வழியில் சாதுவை சந்தித்து நடந்தவற்றை சொல்லி வருத்தப்பட்டன.சாது பாம்பிடம் பேசினார். "பாம்பே! புற்றை உருவாக்கிக்கொள்ளும் ஆற்றல் உனக்கில்லை. அடுத்தவன் உழைப்பை திருடுகிறாயே, அடுத்தவன் உழைப்பை பலத்தால் பெறுவது நியாயமல்ல என்றார்.பாம்பு பேசியது. சாதுவே! உலகத்தில் பலவான்கள் வைத்ததுதான் சட்டம் என்பது உங்களுக்குத் தெரியாதா? பலவானிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்று சொல்லிவிட்டு நகர்ந்தது.கரையான்கள் அழுதுகொண்டே அந்த இடத்தைவிட்டு நகர்ந்தன. சாதுவும் நகர்ந்தார். சில மாதங்கள் சென்றன. பாம்பு தனது குடும்பத்தோடு புற்றில் வசதியாக வசித்து வந்தது. ஒரு நாள் பாம்பு தனது குட்டிகளோடு புற்றிற்கு வெளியில் திரிந்து கொண்டு இருந்தது. அப்போது அங்கு வந்த பருந்து பாம்பை கொத்திக்கொண்டு பறந்தது. குட்டிகள் கதறின. வானத்தில் பறந்து கொண்டிருந்த பருந்து பொத்தென்று பாம்பை கீழே போட்டது. பாம்பு விழுந்த இடம் சாதுவின் ஆசிரம வாசல். உயிர் பிரியும் தருவாயில் சாதுவிடம் பேசியது பாம்பு. சாதுவே! நான் இல்லாமல் குட்டிகளால் வாழ முடியாது. ஆகவே என்னைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சியது. அதற்கு சாது "பாம்பே! விதி சொல்லிக்கொடுக்கும் பாடம் ஒன்றைத் தெரிந்துகொள். இன்று எவற்றையெல்லாம் பலமாக உணர்கிறாயோ, அவற்றையெல்லாம் நாளை பலவீனமாக உணர்வாய். அதே போல, இன்று பலவீனமாக பார்க்கப்படுபவை பலமாக மாறும் காலமும் வெகு தொலைவில் இல்லை. ஆகையால், பலவானாக இருக்கும்போது பக்குவமாகவும், பிறருக்கு கெடுதல் செய்யாமலும் வாழ வேண்டும்.இதிகாசத்திலும் இது போன்ற பல யுத்தங்களை நாம் பார்க்க முடியும். தர்ம புத்திரன் விராட நகரத்தில் பிரவேசிக்கும் பொழுது பாரத யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு விராடநகரம் ரம்யம் என்று துர்கா ஸ்தோத்திரம் மூலமாக அம்பாள் ஸ்ரீ துர்கா மாதாவை பிரார்த்தித்து அங்கனமே யுத்தத்தில் வெற்றி பெறுகிறார். அதுபோன்று ராமாயணத்திலும் ராமபிரானாகப்பட்டவர் மனுஷ்யனாக அவதரித்த போதிலும் அவருக்கு தெய்வீக சக்திகள் பல இருந்த போதிலும் கூட அகஸ்தியரால் உபதேசிக்கப்பட்ட ஆதித்ய ஹ்ருதயத்தை அவர் ஜெபித்த பின்பு இராவணனை வென்றார் என்பது நிதர்சனம். ஆகவே இரு ஸ்தலங்களிலுமே அவர்கள் பலத்துடன் மந்த்ர பலமும் பிரார்த்தனை பலமும் அவர்களுக்கு ஜெயத்தை அளித்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அது போன்று தற்பொழுது நடந்த யுத்தத்திலும் நமது பாரதமாகப்பட்டது நம் அனைவரின் பிரார்த்தனை வஷத்தாலும் மந்திர பலத்தாலும் வெற்றி பெற்று இருக்கிறது .இனியும் வெற்றி பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.




## ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்

அரிதானது மற்றும் அதிர்ஷ்டமானது.

ஒரு மரத்துக்கு ஜலம் விடுவதென்றால் கிளையிலா விடுவார்கள்? பூ, காய் மேலா விடுவார்கள்? வேரிலேதானே விடுவார்கள்? வேரிலே விட்டால் கிளை, இலை, பூ, காய் எல்லவாற்றுக்கும் ஜலம் போய்ச்சேருகிறது. அப்படித்தான் தெய்வ ஸம்பந்தமான விஷயங்களுக்கெல்லாம் லோகம் என்கிற இந்தப் பெரிய விருக்ஷத்திற்கு இந்த பாரத தேசமே வேராக இருக்கிறது.

இலைமேல் பூ, காய் மேலும் கொஞ்சம் ஜலம் தெளித்தால் அதுகளும் அதனால் கொஞ்சம் பச்சென்று ஆனாலும், வேரில் விட்டால்தான் அந்த இலை, பூ முதலானதும் உள்ளே ஸத்துப் பெறுகிறது. அந்த மாதிரி வெளி தேசங்களில் செய்யும் பூஜாதிகளாலும் அந்த தேசங்களுக்குக் கொஞ்சம் நன்மை உண்டாகுமானாலும், இந்த பாரத சேதத்தில் செய்கிறதால்தான் அந்த தேசங்களுக்கும் உள்ளூரப் புஷ்டியான பலன் கிடைக்கும்.லோக ஸ்ருஷ்டியில் பகவான் ஒவ்வொரு தேசத்தில்தான் நல்ல க்ளைமேட், ஒவ்வொன்றில்தான் நல்ல பயிர் பச்சை, ஒவ்வொன்றில்தான் வைரம், தங்கம், இன்னும் விலை உயர்ந்த தாதுப் பண்டங்கள் என்று வைத்திருக்கிறான் . சில தேசங்களை ஒரே குளிர் என்றும் இன்னும் சிலதை ஒரே கொளுத்தல் என்றும் வைத்திருக்கிறான். நில வளம், நீர் வளம், தாது வளம் இல்லாமல் அநேக தேசங்களை வைத்திருக்கிறான். வளமுள்ள தேசங்கள் வளமில்லாத தேசங்களுக்கு ஏற்றுமதி பண்ணி உதவும்படி வைத்திருக்கிறான். அப்படி தெய்வ ஸம்பந்தமான விஷயங்களுக்கு இந்த (பாரத) தேசந்தான், ஒரு பவர் ஹவுஸ். ஊர் பூராவுக்கும் லைட் கொடுக்கிற மாதிரி லோகம் பூராவுக்கும் தெய்வீகத்தை ஸப்ளை செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறான். மநுஷ்ய தேஹத்தில் ஹ்ருதயம் என்று முக்கியமான அங்கமாக ஒன்றை வைத்து அதுதான் தேஹம் பூராவுக்கும் ரத்தத்தை ஸப்ளை செய்து ரக்ஷிக்கும்படியாக அவன் வைத்திருக்கிற மாதிரியே இந்த விச்வ விராட் ஸ்வரூபத்தில் ஸகல தேசங்களுக்கும் தெய்வ ஸம்பந்தமான, தர்ம ஸம்பந்தமான, ஆத்ம ஸம்பந்தமான ஜீவ சக்தியை ஸப்ளை செய்து ரக்ஷிக்கிற ஹ்ருதயமாக நம்முடைய பாரத தேசத்தை வைத்திருக்கிறான்.அந்தந்த தேசத்திலும் தெய்வாநுக்ரஹ சக்திக்கு துன்பம் ஏற்படாமலிருப்பதற்கு அங்கங்கேயும் வழிபாடு - உபாஸனை நடக்க வேண்டியதுதான். இருந்தாலும் எந்த அங்கத்திற்கு துன்பம் வந்தாலும் ஹ்ருதயம் பழுதாகாமல் அதற்கு ரத்த ஸப்ளை செய்தால் தான் வியாதி நிவாரணமாகிற மாதிரி நம்முடைய நாட்டில் விதிவத்தாக வழிபாடுகள் நடந்தால்தான் நமக்கு மாத்திரமில்லாமல் ஸர்வ தேசங்களுக்கும் க்ஷேமமுண்டாக முடியும். பாரதத்தில் பிறப்பது அரிதானது மற்றும் அதிர்ஷ்டமானது.



## “அடிப்படை தர்மங்கள்”

## வித்வான் விரூபாக்ஷ சர்மா

जलमध्ये तिष्ठन्नप्याचामेदित्याह विष्णुः-

जानोरूर्ध्वं जले तिष्ठन्नाचान्तः शुचितामियात् ।

ஜலமத்யே திஷ்டன்னப்யாசாமேதித்யாஹ விஷ்ணு :

ஜானோரூர்த்வம் ஜலே திஷ்டன்னாசாந்த: ஷுசிதாமியாத்

ஜலத்தின் நடுவில் நின்று கொண்டும் ஆசமனம் செய்யலாம் என்கிறார். விஷ்ணு:- முழங்கால்களுக்கு மேல் உள்ள ஜலத்தில் நின்று கொண்டு ஆசமனம் செய்தாலும் சுத்தனாகிறான்.

>>> ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

# ஈயப்பாத்ரத்தில் சமையல் செய்ததை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யலாமா?



ஸமாதானம்:-

ஈயம் பூசின பாத்திரத்திலோ, ஈயப்பாத்ரிரத்திலோ, எதை அவச்யமாகச் செய்யவேண்டியதோ அவைகளைச் செய்து நிவேதனம் செய்யலாம். (அதாவது பித்தளை முதலிய பாத்ரங்களில் செய்தால் எந்த வஸ்துக்கள் கெட்டுப்போகுமோ அவைகளை) எவ்விதத்திலும் அன்னம், பாயஸம், சர்க்கரைப் பொங்கல் முதலிய வஸ்துக்களை ஈயம் பூசின பாத்திரத்தில் வைத்து நிவேதனம் செய்யக்கூடாது. இருப்புப் பாத்திரத்தில் செய்யும்படியான வஸ்துக்களை (தைலபக்வாதிகள்) வேறு பாத்திரத்தில் மாற்றி நிவேதனம் செய்யவேண்டும்.

# >>> கணித சாஸ்திரமும் அத்வைத தத்வமும்

>>> வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி



கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.

கணித மென்பது கணக்கு, கணக்கிலும் அத்வைதம் இருக்கிறது. இன்னும் ஊன்றிப் பார்த்தால் கணக்கின் ஆதாரம் அத்வைதமே. நம் இந்திய, நாட்டில் பண்டையக் காலத்தில் கணித சாஸ்திர நூல்களை எழுதியவர்களுக்குள் பாஸ்கராசாரியார் என்பவரே பிரதானமானவர். அவர் இயற்றிய கணித நூல்களில் மூன்று முக்கியமானவை.

(1) லீலாவதி - வ்யக்த கணிதம்- (ARITHMETIC)

(2) பீஜ கணிதம் - அவ்யக்த கணிதம் - (ALGEBRA),

(8) சித்தாந்த சிரோமணி-வான சாஸ்திரம்-(ASTRONOMY)

இவற்றில், பீஜ கணிதம் என்னும் நூலிலே கீழ்வரும் சுலோகங்கள் கூறப்பட்டுள்ளன.

खगुणेन करणसूत्रं वृत्तार्धम् । बधादौ वियत्खस्य खं खेन घाते बहारो भवेत्खेन भक्तश्च राशिः।
उदाहरणम् ॥ द्विघ्नं त्रिहृत्खं खहतं प्रपञ्च इष्ट्रास्य वर्ग वद मे पञ्च ॥
अस्मिन्विकारः खहरे न राशौ अपि प्रविष्टेष्वपि निःसृतेषु । बहुष्वपि स्याल्लयसृष्टिकाले-ऽनन्ते ऽच्युतें भूतगणेषु यद्वत् ॥

இவைகளின் கருத்து கீழ்வருமாறு -

பூஜ்யம் - அதாவது சுன்னம் (CYPHER) என்பதை எந்த எண்ணோடு கூட்டினாலும் கூட்டுத் தொகை அந்த எண்ணே . 8+0-8.


அந்தப் பூஜ்யத்தை எந்த எண்ணிலிருந்து கழித்தாலும் மிச்சம் அந்த எண்ணே ஆகும். 8-0-8.அந்தப் பூஜ்யத்தினால் எந்த எண்ணைப் பெருக்கினாலும் பூஜ்யமே 'பெருக்கிய தொகை ' ஆகும். 8X0=0.


தொடரும்.

# வேதம் ஓதிய வேதியர்க்கோர் மழை வேதமோதிய வேதியனே சாந்த குணமுள்ள யானை

## வேத சம்ரக்ஷணமே லோகஸம்ரக்ஷணம்








## நமது பாடசாலையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வு .









பகவத் பாதாள் ஸ்ரீ ஆதி சங்கரர் ஜெயந்தி மஹோத்ஸவம் வேதகோஷங்கள் முழங்க வெகு விமரிசையாக நடைபெற்றது.